**Minutes of the Public Hearing Meeting held on 16.07.2010 at 10.00 A.M. at Collectorate, Palayamkottai Road, Korampallam, Thoothukudi District for the proposed "Development of Outer Harbour" in Tuticorin Port, Thoothukudi Taluk, Thoothukudi District.**

**PRESENT**

1. Shri G. Prakash, I.A.S. - Collector, Tuticorin District.
2. Shri G.J. Rao – Chairman, Tuticorin Port Trust.
3. Shri A. Subbiah, I.A.S. – Deputy Chairman, Tuticorin Port Trust.
4. Shri R. Srinivasa Kannan- Chief Engineer, Tuticorin Port Trust.
5. Shri M. Murugan – District Environmental Engineer, TNPCB.

**The list of participants are enclosed in the Annexure**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Thoothukudi District, welcomed the Collector, Thoothukudi District, Chairman, Deputy Chairman, Board of Trustees of Tuticorin Port Trust and public for the public hearing meeting for the development of the outer Harbour by Tuticorin Port Trust. He explained about the need to conduct the public hearing and various provisions of EIA and requested the Port authorities to explain in detail about the proposed project.

The Collector stated that the Tuticorin Port is a developing Port which caters to the needs of Industries situated in and around Tuticorin. Development of Outer Harbour at an estimated cost around Rs.4350.00 Cr., would be an important project and it will generate more employment opportunities directly and indirectly for the welfare of the people in and around Tuticorin. The expansion of Port is significant step forward and planned towards significant growth in Marine Trade. The Project cost includes construction of breakwater, dredging and reclamation, berth construction, jetties, containers, Administration buildings, internal service roads, railway lines, power supply, and other mechanical equipments also and requested the Public to offer their views about the proposed development of outer Harbour Project.

The Chief Engineer/Tuticorin Port Trust made a presentation to the Public to make the Public well aware of the salient features of the development of the Outer Harbour in Tuticorin Port Trust. The presentation included the Port achievements, Project cost, Traffic forecast, etc. To meet the power demand in the near future, development of Outer Harbour in Tuticorin Port is essential.

Followed by the Chief Engineer, Dr.Patterson, National Institute of Oceanography, Goa also made a slide presentation on Environmental Impact Assessment Study done by them for the proposed Outer Harbour Development of Tuticorin Port and explained about the main objectives of the Project in detail. He informed that there will be no impact by the Cyclones to the Project area and the area is free from biological characteristics. It is not envisaged that the Project would bring any adverse impacts to the social life of the people. He informed that Socio economic benefits will be obtained due to the development of outer Harbour in Tuticorin Port. Assessment of Impacts on useful flora and fauna including modern parks and ecologically sensitive area was undertaken and found that environment monitoring should be done periodically in all respects.

Shri Ravi shankar also made a presentation on the Terrestrial Study done by them as per the Ministry Guidelines.

Following the presentations, the Public offered their opinion on the Development of Outer Harbour in Tuticorin Port as follows -

**1. Thiru. Nakeeran, MDMK District Member, Thoothukudi**

He stated that Tuticorin Port was a dream Project of Shri K. Kamarajar & Dr. C.N. Annadurai and expressed his happiness over the Project development of Outer Harbour to be taken up by Tuticorin Port. He requested the Port Management to ensure the environmental factors are not disturbed and livelihood of the fishermen community is taken care. He stated that the MDMK welcome the "Outer Harbour development Project" of Tuticorin Port.

**2. Thiru. M. Johnson, Secretary, Country Boat Employees Association, Thoothukudi.**

He informed that around 60-70% of the workmen in Tuticorin are depending fishing only and even though the lands of fishermen were taken by the Port for the development of Port at initial times say 40 years ago, electricity and water supply have not yet been provided to them. He expressed his unhappiness for the same situation still remains to their colonies. He stated that requirement of diesel would become more if Outer Harbour development takes place since the boat has to travel extra distance to reach shore and vise versa. He also stated that the development of Outer Harbour will create more pollution and hence fishing business will adversely be affected. He requested the Port authorities to ensure that fishing is not affected, due to development of outer Harbour.

**3. Thiru. M. Pushparayan, Kadal Thozhilar Makkal Kootamaipu, Thoothukudi :**

He stated that the air pollution level in Tuticorin is very high. It is found from a Research Magazine, that the fish folk in and around the Harbour area would be completely destroyed & the villages in the northern side of Tuticorin will be adversely affected if outer Harbour is developed and hence, he requested the Port to discuss with the Trust Associations (Arakattalai Amaipugal) in this regard. He stated that sea erosion is high and Tuticorin Port has become a place for dumping of waste materials and it leads way to smuggling also. He informed that the sea water will get spoiled due to dredging by blasting and requested the Port to undertake a detailed study on the consequences of blasting and to take action to provide employment to the fishermen in the proposed Project. He requested the Port to reconsider this Project before implementation in view of the livelihood of fishermen.

**4. Thiru. N. Periasamy, Trustee, Tuticorin Port Trust, Thoothukudi :**

He stated that there will be a group of people who always used to raise objection whenever new proposal is introduced either for construction or development. Likewise, when the Sterlite started commissioning, there were lot of oppositions. But the project was accepted later by various organizations. He also stated that the employment opportunities will increase due to development of outer Harbour and on behalf of the Tuticorin District DMK he whole heartedly welcomed the development of Outer Harbour. He assured that the development of Outer Harbour will add prestige not only to the Port, and also to the Tuticorin City.

He stated that steps will be taken to fulfill the needs of the Punnakayal people. He indicated that on earlier occasions, dredging work was done at Punnakayal to remove the siltation accumulated at the entrance of the Punnakayal fishing jetty.

**5. Thiru. George Gomez, Retired employee of Mumbai Port Trust, Thoothukudi :**

He stated that the development of Outer Harbour is essential for the Tuticorin Port, but privatization is anti-national and insisted that it should not be continued in the Development of Outer Harbour also. He stated that due to privatization of the berths, pilferage and smuggling is increased and requested the Port to take care of the workmen.

**6. Thiru. P.S.S.K. Raja Sankaralingam, Secretary, All India Chamber of Commerce, Thoothukudi :**

He welcomed the Project and stated that this will help the Export Community people to certain extent. He informed that export cargoes are expected to be increased due to the development of container berths in the Outer Harbour.

**7. Tmt. Azuntha, CHEERS Association, Thoothukudi :**

She stated that development of Outer Harbour would make displacement in environment indirectly. Displacement would affect the fishermen and workmen who are wholly depending upon fishing in Tuticorin District and she requested the Port to take welfare measures for the workmen and fishermen due to the difficulties made by displacement. She requested the District Management that transport facilities must be improved in Tuticorin District as development of the City is equally important for the Marine Trade and take into consideration of the above views while developing the Outer Harbour in Tuticorin Port.

**8. Thiru. Rusel, Secretary, CITU, Tuticorin District.**

He stated that the development of Outer Harbour is much essential and it will create more employment opportunities directly or indirectly and hence he welcomed the project. At the same time, the Port should take care of the livelihood of the workmen and the Port to take immediate measures in case of any difficulties are made to the fishermen folk. He suggested that the development of Outer Harbour may be made by the Port instead of encouraging Private investment.

**9. Thiru.P. Kathirvel, Trustee, Tuticorin Port Trust, Thoothukudi:**

He stated that the Public hearing is required only because of the Government guidelines, otherwise it is not essential as the development of outer Harbour is only for 4 ½ kilometer only. He requested the Port Management to spend 0.5% of the Project cost to the welfare measures of the fishermen and workmen. He stated that the Pollution Control Board did not control the Pollution in the Port area and requested the Port to spend 0.5% of the Project cost towards the additional diesel expenditure proposed to be incurred by the fishermen along with the diesel premium. He stated that deepening the channel is equally important to bring the vessels having more draught. On behalf of Indian National Congress, he conveyed his acceptance to the development of Outer Harbour.

**10. Thiru. John P. Rayan, Secretary, National Union Fisherman, Thoothukudi :**

He stated that fishermen folk will be affected due to dredging by blasting proposed to be carried out while developing the Outer Harbour of Tuticorin Port. He stated that employment opportunities will not increase because the No. of employees at present is very less when compared to the No. of employees in the initial stage when there were only 3 berths. He finally stated that the life of fishermen should be taken into consideration while developing the outer Harbour in Tuticorin Port.

**11. Thiru. V.K. Mariappan, Leader of Country boat Association, Thoothukudi :**

He stated that 265 families are involved in making Nets for catching certain varieties of fishes like Nethili, Salai & Prawns and those varieties of fishes are abundant in nature near the Harbour area due to calm water. Hence, it would affect fish catching & also their Netting business. He stated that there were no literate people in fishing community in the past, but now there are reasonable No. of literate people in Fishing communities and hence, he requested employment opportunities for them in the Outer Harbour Project through the Port Trust Management.

**12. Thiru. M.A. Dharmar, Vanavil Foundation / NGO, Thoothukudi :**

He requested the Port to develop the Outer Harbour in Tuticorin Port in such a way that rehabilitation is made to all spheres of people.

Thiru. A. Subbiah, Deputy Chairman, Tuticorin Port Trust informed the public that the views of all the speakers will be taken into consideration and changes will be made accordingly in the proposal for development of Outer Harbour. The Project would not be undertaken leaving the public, fishermen, and workmen in difficulties. The livelihood of the fishermen would be considered primarily while developing the Outer Harbour. He assured that this Port always be a good friend to the fishermen and would not make any hindrance for fishing by this Project and socio-economic development will be taken up at 3% of Project cost.

He requested their cooperation for taking up the Development of Outer Harbour Project in Tuticorin.

Thiru. G.J. Rao, Chairman, Tuticorin Port Trust stated that the development of Outer Harbour is not only prestigious to the Port but to the Pearl City also and assured that the constraints brought in the Hearing meeting by the Public would be considered and taken care, during implementation of the Project.

The District Collector thanked the public and participants for registering their suggestions / opinion about the proposed project and declared the public hearing as concluded.

| | |
|---|---|
| DEE, TNPC BOARD,<br>THOOTHUKUDI. | DISTRICT COLLECTOR,<br>THOOTHUKUDI DISTRICT. |

16.07.2010 அன்று 10.00 மணியளவில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்டுணர்வு கூட்டத்தின் குறிப்புகள் (Minutes) – திட்டம் தி/ள். தூத்துக்குடி துறைமுக (வெளி துறைமுக விரிவாக்கம்) தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி மாவட்டம்.

பங்கேற்றேவர்கள்

1. திரு. G. பிரகாஷ், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம்.
2. திரு. G.J. ராவ், தலைவர், தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகம்.
3. திரு. A. சுப்பையா,இ.ஆ.ப., உபதலைவர், தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகம்.
4. திரு. R. சீனிவாச கண்ணன், தலைமை பொறியாளர், தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகம்.
5. திரு. M. முருகன், மாவட்ட சுற்றுப்புற சூழல் நலப் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி.

கூட்டத்தில் கலந்து கொண்ட துறைமுக பொறுப்புக் கழக உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் குறித்த விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுப்புற சூழல் நலப் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி கூட்டத்திற்கு வருகை தந்த மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி துறைமுக பொறுப்புக்கழக தலைவர் மற்றும் உபதலைவர், துறைமுக பொறுப்புக்கழக உறுப்பினர்கள், அதிகாரிகள், பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரை வரவேற்று பொதுமக்கள் கருத்து கேட்டுணர்வு கூட்டத்தின் அவசியத்தை விபரமாக எடுத்துரைத்தார். மேலும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையில் உள்ள பல்வேறு குறிப்புகளையும் எடுத்துரைத்தார். புதிதாக அமையவுள்ள தூத்துக்குடி துறைமுக (வெளி துறைமுக விரிவாக்கத்திட்டம் பற்றிய முழு விவரங்களை பொதுமக்களுக்கு எடுத்துரைக்க துறைமுக பொறுப்பு கழக அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

மாவட்ட ஆட்டசித்தலைவர் அவர்கள் தலைமையுரையில், தூத்துக்குடி துறைமுகம் வளர்ச்சியடைந்து வரும் துறைமுகங்களில் ஒன்றாகும், இத்துறைமுகம் தூத்துக்குடி மாவட்டத்தில் இயங்கிவரும் தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப் பொருட்களை இறக்குமதி செய்து வருகிறது. அமையவுள்ள வெளித்திட்ட துறைமுகம் சுமார் 4350 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தவுள்ளது. இத்திட்டம் மூலம் இப்பகுதி மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும். இவ்விரிவாக்கத்திட்டம் தூத்துக்குடி கடல்சார் வாணிபத்திற்கு மற்றுமொரு மைல்கல் ஆகும். இத்திட்டத்தில் கடல் ஆழப்படுத்துதல், அலை தடுப்பு சுவர் கட்டுதல், கப்பல் தளங்கள் அமைத்தல், நிர்வாக கட்டிடம் கட்டுதல் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளான சாலை, மின்வசதி, இருப்புப்பாதை அமைத்தல் அடங்கும். இத்திட்டம் குறித்தான பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தூத்துக்குடி துறைமுக பொறுப்புக்கழக முதன்மை பொறியாளர் நிழற்படங்கள் (Slide) மூலம் இத்திட்டம் பற்றிய விபரங்களை விளக்கி கூறினார்.

அதன்பிறகு முனைவர் பீட்டர்சன், சுகந்தி தேவதாசன் அறக்கட்டளை, தூத்துக்குடி, தேசிய கடல் சார் ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் ஆகியோர் இத்திட்டம் பற்றிய விரிவான விளக்கங்களையும், இத்திட்டத்தின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தனர்.

இத்திட்டத்தினால், கடல்வாழ் உயிரினங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாவண்ணம் இத்திட்டம் செயல்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

1. திரு. நக்கீரன், ம.தி.மு.க மாவட்ட செயற்குழு உறுப்பினர், தூத்துக்குடி

இத்திட்டம் திரு. கே. காமராஜர், முனைவர் சி.என். அண்ணாத்துரை ஆகியோரின் கனவுத் திட்டம் ஆகும். இத்திட்ட செயலாக்கத்தால் அவர் மிகவும் மகிழ்ச்சியடைவதாக தெரிவித்தார். மேலும் துறைமுக பொறுப்புக் கழகம், சுற்றுச்சூழல் காரணிகளுக்கு பாதிப்பு ஏற்படாதா வகையிலும், மீனவ சமுதாயத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாதவண்ணம் இத்திட்டத்தை செயல்படுத்துமாறு கேட்டுக்கொண்டு, இத்திட்டத்தை வரவேற்பதாக கூறினார்.

2. **<u>திரு. ம. ஜான்சன், செயலாளர், நாட்டுப்படகு தொழிலாளர்கள் சங்கம், தூத்துக்குடி</u>**

தூத்துக்குடி மாவட்ட மக்களில் 60 – 70 சதவீதம் மக்கள் மீன்பிடித் தொழிலை நம்பி உள்ளனர். தூத்துக்குடி துறைமுகம் ஆரம்பப்பதற்கு 40 வருடங்களுக்கு முன்பு நிலத்தை வழங்கிய மீனவர்களுக்கு இன்றுவரை மின்சாரம் மற்றும் குடிநீர் வசதி துறைமுக கழகத்தால் ஏற்படுத்தி தரவில்லை. இந்த நிலை இன்று வரையிலும் நிலம் வழங்கிய மீனவ காலனி மக்களுக்கு தொடருவதாக வருத்தத்துடன் கூறினார். விரிவாக்க துறைமுகத்திட்டம் செயல்படுத்தும் போது மீனவர்கள் அதிக தூரம் சுற்றி செல்ல வேண்டியிருப்பதால் மீன்பிடி படகுகளுக்கு தேவையான எரிபொருள் அதிகமாகும். விரிவாக்கத்திட்டத்தினால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்றும் மீன்பிடி தொழிலுக்கு அதிக பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் இத்திட்டத்தை செயல்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

3. **<u>திரு. எம். புஷ்பராயன், கடல் தொழிலாளர் மக்கள் கூட்டமைப்பு, தூத்துக்குடி</u>**

இத்திட்டத்தினால் தூத்துக்குடி மாவட்டத்தில் காற்று மாசு அதிகரிப்பதற்கு வாய்ப்பு உள்ளதாகவும், துறைமுகத்தைச் சுற்றியுள்ள கடல் வாழ் உயிரினங்கள் முற்றிலுமாக அழியும் நிலையில் உள்ளதாகவும், இது குறித்து அறக்கட்டளை அமைப்புகளுடன் விவாதிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். தூத்துக்குடி துறைமுகம் கழிவுகளை இறக்குமதி செய்வதாகவும், கடத்தலுக்கு புகலிடமாகவும் உள்ளதாக தெரிவித்தார். கடல் ஆழப்படுத்த வெடிவைத்து தகர்க்கும் பொழுது கடல் நீர் அசுத்தம் ஆவதுடன், கடல்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து ஏற்படும் என்றும் இது குறித்து விரிவான ஆய்வு செய்ய வேண்டும் எனவும், இத்திட்டத்தை மீனவர்களின் நலன் கருதி தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகம் மறுபரிசலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

4. **<u>திரு. என். பெரியசாமி, துறைமுக பொறுப்புக் கழக உறுப்பினர், தூத்துக்குடி</u>**

புதிதாக ஏதாவது ஒரு திட்டம் நாட்டின் நலன் கருதி செயல்படுத்தபடும் பொழுது ஒரு சாரார் அத்திட்டங்களை எதிர்ப்பதையே வழக்கமாக கொண்டுள்ளார்கள் என்றும், உதாரணமாக தூத்துக்குடியில் இயங்கிவரும் ஸ்டெர்லைட் தொழிற்சாலை ஆரம்பிக்கும் முன்னர் பல எதிர்ப்புகள் இருந்தது. ஆனால் தற்போது எல்லா அமைப்புகளும் அத்திட்டத்தை முழு மனதோடு ஏற்றுக்கொண்டார்கள். துறைமுக விரிவாக்கத் திட்டத்தினால் வேலை வாய்ப்புகள் பெரும் என்றும், தூத்துக்குடி நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இத்திட்டத்தை முழு மனதோடு வரவேற்பதாக தெரிவித்தார். மேலும் துறைமுக விரிவாக்கம் தூத்துக்குடி துறைமுகத்திற்கு மட்டுமல்லாது தூத்துக்குடி நகரத்திற்கே பெருமை சேர்க்கும் என்று கூறினார். புன்னைக்காயல் பகுதியில் மீன்படி துறைமுகத்திற்காக ஆழப்படுத்தப்படும் பணியை தூத்துக்குடி துறைமுகமே செய்து கொடுத்துள்ளது என்றும் மேலும் புன்னக்காயல் கிராம மக்களின் தேவைகளை துறைமுக பொறுப்புக் கழகம் பூர்த்தி செய்து கொடுக்கும் என்றும் கூறினார்.

5. **<u>திரு. ஜார்ஜ் கோமஸ், மும்பை துறைமுக பொறுப்புக்கழகத்தின் ஓய்வு பெற்ற ஊழியர், தூத்துக்குடி.</u>**

தூத்துக்குடி துறைமுக விரிவாக்கத்திட்டம் மிகவும் இன்றியமையாதது என்றும், ஆனால் தனியார் மயமாக்குதல், தேசத்திற்கு எதிரானது என்றும், விரிவாக்கத் திட்டத்தில் தனியார் மயமாக்குதல் தொடரக் கூடாது என்றும் தெரிவித்தார். கப்பல் தளங்களை தனியார் மயமாக்கும் பொழுது திருட்டு மற்றும் கடத்தல் அதிகமாக வாய்ப்புள்ளதாகவும், துறைமுக பணியாளர்களின் நலத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

6. **<u>திரு. பி.எஸ்.எஸ்.கே. ராஜா சங்கரலிங்கம், செயலாளர், அகில இந்திய தொழிற் கூட்டமைப்பு, தூத்துக்குடி</u>**

இத் துறைமுக விரிவாக்கத் திட்டம் ஏற்றுமதியாளர்களுக்கு பல வகையிலும் உதவும் என்றும் ஏற்றுமதியாகும் சரக்குகள் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

7. **<u>திருமதி. அசுந்தா, சியர்ஸ் தொண்டு நிறுவனம், தூத்துக்குடி</u>**

இத் துறைமுக விரிவாக்கத் திட்டத்தினால் மீன்பிடித் தொழில் பாதிக்கப்படுவதோடு மீனவர்களும் இடமாறுதல் செய்வது அவசியமாகிறது என்றும், துறைமுக பொறுப்புக் கழகம் இதை கருத்தில் கொண்டு அவர்களுடைய துயர்களை களைய முன் வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். போக்குவரத்து வசதிகள் கடல் வாணிபத்திற்கு மிகவும் அவசியமாக இருப்பதால் அதை மேம்படுத்த தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

8. **<u>திரு. ரசல், செயலாளர், சி.ஐ.டி.யூ, தூத்துக்குடி</u>**

இத் துறைமுக விரிவாக்கத் திட்டம் மிகவும் அவசியம் என்றும், இது நேரிடையாகவும், மறைமுகமாகவும் இப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும் என்றும் அதே சமயத்தில் துறைமுகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் மீனவர்களின் நலனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இத் துறைமுக விரிவாக்கத் திட்டம் தனியார் மூலம் செயல்படுத்துவதை விட துறைமுக பொறுப்புக் கழகமே இதை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

**9. திரு. பி. கதிர்வேல், ஏ.ஐ.டி.யூ.சி, தூத்துக்குடி**

அரசாங்க வழிகாட்டுதலின்படி பொதுமக்கள் கருத்து கேட்புணர்வு கூட்டம் நடத்தப்படுகிறது. இத்திட்டத்தில் துறைமுகம் 4 ½ கி.மீ மட்டுமே விரிவுபடுத்தப்படவுள்ளதால் பொதுமக்கள் கருத்து கேட்புணர்வு கூட்டம் தேவையற்றது என்று தெரிவித்தார். துறைமுக பொறுப்புக் கழகம் இத்திட்ட மொத்த மதிப்பீட்டில் 0.5 சதவீதம் மீனவ மக்களின் நலனுக்காக செலவளிக்கப்பட வேண்டும் என்றும் மாசு கட்டுப்பாடு வாரியம் திறம்பட செயல்பட வேண்டும் என்றும் 0.5 சதவீதம் மீனவர்களுக்கு டீசல் செலவிற்கு வழங்கப்பட வேண்டும் என்றும் பெரிய கப்பல்களை துறைமுகத்திற்குள் கொண்டு வருவதற்கு மிதவை ஆழம் அதிகப்படுத்தப் பட வேண்டும் என்றும் இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் இத்திட்டத்தை வரவேற்பதாக தெரிவித்தார்.

**10. திரு. ஜான் பி ராயன், செயலாளர், தேசிய மீனவர் சங்கம், தூத்துக்குடி**

இத்துறைமுகம் விரிவாக்கத்தின் போது வெடி வைத்து கடல் ஆழப்படுத்தும் பொழுது மீன்பிடித் தொழில் பாதிப்படையும் என்றும் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட மாட்டாது என்றும் தூத்துக்குடி துறைமுகம் ஆரம்ப காலத்தில் உள்ள பணியாளர்களே தற்போதும் பணியாற்றுகிறார்கள் என்றும் முடிவில் மீனவ மக்களின் நலனை கருத்தில் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

**11. திரு. வி.கே. மாரியப்பன், தலைவர், நாட்டுப்புற மீன்பிடி படகு சங்கம், தூத்துக்குடி**

இத்துறைமுக பகுதியில் சுமார் 265 குடும்பங்கள் வலை தயாரிப்பதிலும், கடலோரப் பகுதியில் அதிகம் காணப்படும் மீன்களான நெத்திலி, சாலை மற்றும் இறால் ஆகியவை கடல் நீர் அமைதியாக இருப்பதால் அதிகம் காணப்படுகிறது. விரிவாக்கத்திட்டத்தினால் மேற்கூறிய செயல்கள் தடைபடும் என்றும் மீனவ சமுதயாத்தில் படித்தவர்கள் கணிசமான அளவில் இருப்பதால் அவர்களுக்கு துறைமுக விரிவாக்கத்தில் துறைமுக பொறுப்புக்கழகம் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

**12. திரு. எம். ஏ. தர்மர், வானவில் அரசு நலச் சங்கம், தூத்துக்குடி**

தூத்துக்குடி துறைமுக விரிவாக்கத்திட்டம் எல்லா தரப்பட்ட மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

திரு. அ. சுப்பையா, துணைத்தலைவர், தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகம் அவர்கள் இந்த கருத்து கேட்பு கேட்டுணர்வு கூட்டத்தில் தெரிவித்த எல்லா கருத்துக்களையும் கருத்தில் கொண்டு இத்திட்டத்தில் மாறுதல்கள் தேவைப்படின் அதன்படி திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார். இத்திட்டம் பொதுமக்களுக்கோ, மீனவ மக்களுக்கோ எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படாது என்றும் மீனவர்களின் நலத்தை முக்கியமாக கருத்தில் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார். தூத்துக்குடி துறைமுக பொறுப்புக்கழகம் பொதுமக்களுக்கும், மீனவர்களுக்கும் எப்பொழுதும் நல்ல நண்பனாகவே இருந்து வருவதாகவும், சமுதாய மேம்பாட்டிற்காக இத்திட்டத்தில் மூன்று சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அனைவரும் இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்த ஒத்துழைப்பு தருமாறு தெரிவித்தார்.

திரு. சி.ஜே. ராவ், தலைவர், தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகம் அவர்கள் இந்த விரிவாக்கத் திட்டம் தூத்துக்குடி துறைமுகத்திற்கு மட்டுமல்லாது இந்த முத்து நகருக்கே பெருமை சேர்க்கும் திட்டமாகும் என்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட பொதுமக்களுடைய கருத்துக்கள் அனைத்தையும் கருத்தில் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று உறுதியளித்தார்.

முடிவில் மாவட்ட ஆட்சித்தலைவர், இந்த பொதுமக்கள் கருத்து கேட்டுணர்வு கூட்டத்தில் தங்களது கருத்துக்களையும் / ஆலோசனைகளையும் வழங்கிய பொதுமக்களுக்கும் கூட்டத்தில் பங்கேற்றவர்களுக்கும் நன்றி கூறி இந்த பொதுமக்கள் கருத்து கேட்டுணர்வு கூட்டம் முடிந்ததாக அறிவித்தார்.

மாவட்ட சுற்றுப்புற சூழல் நலப்
பொறியாளர்,
தநாமாக வாரியம், தூத்துக்குடி.

மாவட்ட ஆட்சியர்,
தூத்துக்குடி மாவட்டம்,
தூத்துக்குடி.